## வாக்குமூலம்

## கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

## வழக்கு எண். SC.No.72/2015

## வழக்கு சாட்சி: PW.5

## தேதி: 08.01.2024

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **மரியராணி** | **ஜாதி:** | **நாடார்** |
| **கணவர் பெயர் :** | **பெத்தலீஸ்** | **தொழில்:** | **ஆசிரியை** |
| **கிராமம்:** | **குன்னத்தூர்** | **சமயம்:** | **கிறிஸ்தவர்** |
| **தாலுகா:** | **குளித்துறை** | **வயது:** | **58/2024** |

(3வது எதிரி ஆஜர். 1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 2 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனு அனுமதிக்கப்படுகிறது.)

**முதல் விசாரணை:**

எனக்கு சொந்த ஊர் கன்னியாகுமரி மாவட்டம், குளித்துறை தாலுகா, குன்னத்தூர் கிராமம் ஆகும். நான் 1993ம் வருடம் சிவகங்கையில் வீட்டுவாரிய வசதி குடியிருப்பிலும் பின்னீடு திருமாஞ்சோலையிலும் குடியிருந்தோம். எனது கணவர் பெத்தலீஸ் ஆசிரியர் வேலை பார்த்தார். எனது கணவர் முதலில் மானாகுடியில் வேலை பார்த்து பின்னீடு திருமாஞ்சோலைக்கு மாறுதலாகி வந்தார். நாங்கள் திருமாஞ்சோலையில் வீடு பிடித்துக் குடியிருந்து வந்தோம். எங்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள். என் கணவருக்கு பெண்கள் பழக்கம் இருந்தது. பணம் கொடுக்கல் வாங்கலில் எனது கணவருக்கும் எதிரிகள் வெள்ளைச்சாமி, செந்தில், சதீஷ் ஆகியோர்களுக்கும் தகராறு இருந்து வந்தது. 2012ம் ஆண்டு 10வது மாதத்தில் அவரை காணவில்லை. அது குறித்து கன்னியாகுமரி மாவட்டத்தில் புதுக்கடை காவல் நிலையத்தில் நான் புகார் மனு கொடுத்திருந்தேன். கொஞ்ச நாட்களாக என் கணவரை காணவில்லை. 2012ம் வருடம் 10ம் மாதம் என் கணவர் பள்ளிக்கு வரவில்லை. 29.10.2012ம் தேதி எனது கணவரை எதிரிகள் கொலை செய்துவிட்டதாக சிவகங்கை தாலுகா காவல் நிலையத்திலிருந்து எனக்கு தகவல் வந்தது. நான் பள்ளியிலிருந்து தாலுகா காவல் நிலையம் வந்தேன். அங்கிருந்து என்னை பனங்காடியில் உள்ள கிணற்றின் அருகில் அழைத்துச் சென்றார்கள். அங்கு என் கணவரின் சட்டை, பெல்ட், பேண்டை நான் அடையாளம் காட்டினேன். என்னிடம் காட்டப்படும் எரிந்த நிலையில் உள்ள பேண்டுடன்கூடிய பெல்ட் **அ.த.சா.பொ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம்

காட்டப்படும் வெள்ளைச் சட்டை ஏற்கனவே அ.த.சா.பொ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் கேன் நான் சம்பயிடத்தில் பார்த்ததாகும். அது ஏற்கனவே அ.த.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னீடு நான் காவல் நிலையத்தில் வைத்து எதிரிகளை பார்த்தேன். ஆஜர் 3 எதிரியை நான் காவல் நிலையத்தில் பார்த்தேன். இன்று ஆஜர் இல்லாத 1, 2 எதிரிகளையும் நான் காவல் நிலையத்தில் பார்த்தேன். பின்னீடு டிஎன்ஏ பரிசோதனைக்காக என் கணவரின் எலும்புகளை எடுத்தார்கள். அந்த டிஎன்ஏ பரிசோதனைக்காக என்னிடமும் என் மகள்களிடமும் இரத்த மாதிரிகளை எடுத்தார்கள். அந்த டிஎன்ஏ பரிசோதனையில் இறந்துபோன பிரேதம் என் கணவரின் பிரேதம் என அறிக்கை வந்தது. பின்னீடு காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்க நான் நடந்த விபரங்களை கூறினேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

என் கணவர் கொலை செய்யபட்ட விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. எதிரிகள் தான் என் கணவரை கொலை செய்தார்கள். எதிரிகள் தான் என் கணவரை கொலை செய்தார்கள் என்ற விபரத்தை காவல் துறையினர் மூலம் தெரிந்துக் கொண்டேன் என்றால் சரிதான். எதிரி செந்தில் தான் தான் கொலை செய்தேன் என்று கிராம நிர்வாக அலுவலரிடம் வாக்குமூலம் கொடுத்த விபரம் எனக்கு காவல் துறை மூலமாக தெரியும். எதிரிகளை காவல் நிலையத்தில் வைத்து போலீசார் எனக்கு அடையாளம் காட்டினார்கள் என்றால் சரிதான். அவ்வாறு நான் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதால் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். 2006ம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து நான் என் கணவரிடமிருந்து பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரிதான். அவ்வாறு பிரிந்து வாழ்ந்து வந்த கட்டத்தில் நான் சிவகங்கை தியாகி சேது இராமச்சந்திரன் தெருவில் குடியிருந்து வந்தேன் என்றால் சரிதான். அப்பொழுது என் கணவர் திருமாஞ்சோலையிலேயே வசித்து வந்தார். நான் பிரிந்து வாழ்ந்த காலம் முதல் என் கணவர் கொலையுண்டு இறக்கும் காலம் வரை நாங்கள் சேர்ந்து வாழவில்லை என்று சொன்னால் சரிதான். அவ்வாறு பிரிந்து வாழ்ந்து வந்த காலக்கட்டத்தில் என் கணவரின் ஆடைகள் பற்றிய விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அவர் தினமும் பள்ளிக்கு வரும் போது நான் பார்த்து தெரிந்துக் கொண்டுள்ளேன். எனது கணவர் காணாமல் போனது சம்பந்தமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் புதுக்கடை காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகார் மனுவில் என்

கணவர் பள்ளிக்கு வரவில்லை என்றும் காணாமல் போய்விட்டார் என்றும் புகார் கொடுத்துள்ளேன். அவர் எந்த கலர் பேண்ட், சட்டை, பெல்ட் அணிந்து காணாமல் போனார் என்று எனது புகார் மனுவில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு குறிப்பிட்டு புகார் மனுவில் சொல்லாத நிலையில் சம்பவயிடத்தில் நான் எனது கணவரின் ஆடைகள் மற்றும் பெல்ட் ஆகியவற்றை அடையாளம் கண்டிருக்க முடியாது என்றும் காவல் துறையினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அ.த.சா.பொ.9 தற்சமயம் என்ன நிறத்தில் உள்ளது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் தற்சமயம் லைட் காக்கி கலரில் உள்ளது. போலீசார் என்னை விசாரிக்கும் போது எனது கணவரின் வங்கிக் கணக்கிலிருந்து ஜிபிஎப் பணம் ரூ.1,27,000/- 2012 அக்டோபர் மாதம் எடுக்கப்பட்டுள்ளது என நான் சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். இந்த விபரத்தை நான் வங்கியிலிருந்து தெரிந்துக் கொண்டேன். 2012ம் ஆண்டு அக்டோபர் மாதம் அவர் உயிருடன் இருந்தாரா என்றால் இருந்தார். நான் கன்னியாகுமரி மாவட்டம், புதுக்கடை காவல் நிலையத்தில் எனது கணவர் காணாமல் போய்விட்டதாக கொடுத்த புகார் மனுவில் எனது கணவருக்கு பெண்கள் சகவாசம் இருந்ததாகவோ இந்த எதிரிகளால் தான் காணாமல் போய்விட்டதாகவும் குறிப்பிட்டு புகார் மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் எதிரிகளை அடையாளம் பார்ப்பதற்கு முன்பாக பூவந்தி காவல் நிலையத்திலோ, சிவகங்கை நகர் காவல் நிலையத்திலோ, சிவகங்கை தாலுகா காவல் நிலையத்திலோ இந்த எதிரிகளினால் தான் என் கணவர் காணாமல் போய்விட்டார் என நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 2003ம் வருடம் எனக்கும் எனது கணவருக்கும் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக நான் தற்கொலை செய்துகொள்வதற்காக நான் என் உடம்பில் தீ வைத்துக் கொண்டேன் என்றும் சிகிச்சைக்கு பின்னீடு குணமானேன் என்றும் சொன்னால் சரிதான். 2003ம் ஆண்டிலிருந்து எனக்கும் எனது கணவருக்கும் அவ்வப்போது பிரச்சினை ஏற்படும் என்றால் சரிதான். அப்போது ஏற்பட்ட பிரச்சினைகளுமே எனது கணவர் பெண்களிடம் வைத்துக் கொண்ட தகாத சகவாசத்தினால் தான் ஏற்பட்டது என்றால் சரிதான். எனது கணவருக்கு பெண்கள் சகவாசத்தின் காரணமாக 2003ம் ஆண்டிலிருந்தே நிறைய பிரச்சினை இருந்து வந்தது என்றால் சரிதான். அவ்வாறு ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளின்

காரணமாக கூட என் கணவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த எதிரிகளால் தான் என் கணவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. டிஎன்ஏ அறிக்கையில் இறந்து போனவர் எனது கணவர் தான் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, ஆனால் அப்போது டிஎன்ஏ பரிசோதனைக்கு மாதிரிகள் அனுப்பப்பட்ட விபரம் எனக்கு தெரியும். சம்பவத்திற்கு முன்பாகவே எதிரி வெள்ளைச்சாமியையும் மற்ற எதிரிகளை அவருடன் சேர்ந்தும் நான் பார்த்துள்ளேன்.